# ஊடக அறிவித்தல்

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2025(2026)

## தனியார் வகுப்புக்கள் நடாத்துவதைத் தடை செய்தல்

2025 க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை 17.02.2026 தொடக்கம் 26.02.2026 வரை 3545 பரீட்சை நிலையங்களில் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 22 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைக்கமைவாக, 21.06.2013 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1816 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக,

- க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை 2025(2026) இதற்கமைவாக 11.02.2026 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தொடக்கம் பரீட்சை முழுமையாக நிறைவடையும் வரை,
  - பரீட்சார்த்திகளுக்காக தனியார் வகுப்புக்களை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும்
  - பாடம் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துதல்
  - மேற்படி பரீட்சையின் ஊக வினாப்பத்திரங்களை அச்சிடல், அவற்றை விநியோகித்தல்
  - பரீட்சை வினாப்பத்திரத்திலுள்ள வினாக்களைத் தருவதாகவோ அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள், இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மூலம் பிரசுரித்தல், அவற்றைத் தம்வசம் வைத்திருத்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

யாரேனும் ஒருவரோ நிறுவனமோ வேறு தரப்பினரோ இக்கட்டளையை கவனத்திற் கொள்ளாமல் செயற்படின், அந்நபர் அல்லது அந்நிறுவனம் அல்லது அத்தரப்பினர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் கருதப்படுவர்.

யாரேனும் ஒருவரோ நிறுவனமோ தரப்பினரோ இக்கட்டளையை ஏதேனும் விதத்தில் மீறிச் செயற்பட்டால் அது தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ பொலிஸ் தலைமையகத்திற்கோ அல்லது பரீட்சைத் திணைக்களத்திற்கோ பின்வரும் தொலைபேசி எண்கள் ஊடாக முறைப்பாடு செய்யமுடியும்.

| | |
|---|---|
| பொலிஸ் தலைமையகம் | - 0112421111 |
| பொலிஸ் அவசர அழைப்பு எண் | - 119 |
| இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நேரடி அழைப்பு எண் | - 1911 |
| பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை | - 0112784208/ 0112784537 |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்